பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் (எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை—600 009.

கடித எண்.6650 / எஸ் / 2007—1 நாள் 25.6.2007

அனுப்புநர்

திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 9
துறைத் தலைவர்கள்/மாவட்ட ஆட்சியர்கள்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை - 2,
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை - 15.

அய்யா/அம்மையீர்,

பொருள் பணியாளர் தொகுதி — அரசுப் பணியாளர்கள் - இடமாற்றம் - பொதுமாறுதல்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிகத் தடை - 2007-08 ஆம் ஆண்டிற்கும் நீட்டித்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 7.1.94.
2. அரசுக்கடித எண். 6539 /எஸ் /2004-3, பமநிசீ(எஸ்) துறை, நாள் 1.4.2004.
3. அரசுக்கடித எண். 30192/எஸ் /2007-1, பமநிசீ(எஸ்) துறை, நாள் 12.6.2007.

.....

பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி, ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதம் 1 — ஆம் நாள் முதல் மே மாதம் 31 — ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்தில் அரசுப் பணியாளர்களின் பொது மாற்றல்கள் நடைபெறல் வேண்டும். நிருவாகத் தேவையில்லாத பட்சத்தில், மூன்றாண்டுகள் பணிமுடித்தவர்கள் என்ற காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாற்றல்களுக்கு,

அரசு நிருவாகச் செலவைக் குறைக்கும் பொருட்டு 1999–ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. பின்னர் பொதுமாற்றல்களுக்கான இத்தடையாணை 2000, 2001, 2002, 2003 மற்றும் 2004–ம் ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. நிருவாகக் காரணங்களின் காரணமாக 2005, 2006 – ஆம் ஆண்டுகளில் பொதுமாறுதல் தடையாணை நீட்டித்து ஆணைகள் எதுவும் வெளியிடப்படவில்லை. எனினும், மேற்படி தடையாணையினை நீக்கி ஆணைகள் வெளியிடப்படாததால், பொதுமாறுதல்களுக்கான தடையாணை தொடர்ந்து நடைமுறையில் இருந்துவந்தது.

2. மேற்காணும் சூழ்நிலையில், பொதுமாறுதலுக்கான தடையாணையினை தொடர்வது குறித்து ஆராய்ந்த அரசு, 2007–08 ஆம் ஆண்டிற்கும் பொதுமாறுதலுக்கான தடையாணையினை நீட்டிக்க முடிவெடுத்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) நிருவாகத்தேவையில்லாத பட்சத்தில், மூன்றாண்டுகள் பணி முடித்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாற்றல்களுக்கு 1999–ம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்து வரும் தடையினை 2007–ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கலாம் .

(ii) நிருவாகத் தேவையின் பொருட்டு மாற்றல்கள் இன்றியமையாததெனில், அத்தகைய மாற்றல்களை மட்டும் அனுமதிக்கலாம்.

(iii) காலியாக உள்ள இடத்திற்கு விருப்ப மாற்றல் கோரும் விண்ணப்பம், ஒருவருக்கு ஒருவரான இசைவு மாற்றல் மற்றும் கணவன் / மனைவி பணிபுரியும் இடத்திற்கு மாற்றல் கோருபவர்களின் விண்ணப்பங்களை மட்டும், பயணப்படி மற்றும் தினப்படி முதலியன கோராத பட்சத்தில் ஆராய்வு செய்து மாற்றல் வழங்கலாம்.

3. மேற்குறிப்பிட்ட ஆணையினை தவறாமல் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

தலைமைச் செயலாளருக்காக

நகல்

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் அனைத்து பிரிவுகள்,
நிதித்துறை, சென்னை 9,
மாநிலக் கணக்காயர்(1 மற்றும் 2) சென்னை 18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 9/5/79 மற்றும் 35.
முதலமைச்சர் அலுவலகம் சென்னை 9